சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,சென்னை-08

ந.க.எண். 8681/ அ6 /2023, நாள். .03.2023.

பொருள் பள்ளிக் கல்வி –சென்னை மாவட்டம் – சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு/அரசு நிதி உதவி பெறும் மற்றும் தனியார் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு, வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு பிரி மெட்ரிக் / போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை மற்றும் சுகாதாரக் தொழில் புரிவோர் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை எந்தவொரு மாணவ/மாணவியர்களுக்கும் விடுபடாமல் பெற்று வழங்கும் பொருட்டு ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இந்திய அஞ்சல் துறையும் இணைந்து பள்ளி வளாகங்களிலேயே ஆதார் எண்ணுடன் இணைந்த வங்கிக் கணக்கு தொடங்குதல் தொடர்பாக.

பார்வை சென்னை மாவட்டம் ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலக மின்னஞ்சல் நாள். 04.03.2023.

……………………….

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காண் ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலக மின்னஞ்சலின் படி சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு/அரசு நிதி உதவி பெறும் மற்றும் தனியார் உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு, வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு பிரி மெட்ரிக் / போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை மற்றும் சுகாதாரக் குறைவான தொழில் செய்வோர் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை எந்தவொரு மாணவ/மாணவியர்களுக்கும் விடுபடாமல் பெற்று வழங்கும் பொருட்டு ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இந்திய அஞ்சல் துறையும் இணைந்து பள்ளி வளாகத்திலேயே ஆதார் எண்ணுடன் இணைந்த வங்கிக் கணக்கு தொடங்குவதற்காக இணைப்பில் கண்டுள்ளவாறு பள்ளி வாரியாக முகாம் நடத்தப்படவுள்ளது.

எனவே ஒவ்வொரு பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் தங்கள் பள்ளியில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர் ஒருவரை மேற்காண் பணிக்கு Nodal Officer ஆக நியமனம் செய்து

மாணவ/மாணவியர்களிடம் இருந்து புதிதாக வங்கிக் கணக்கு துவங்க கீழ்க்கண்ட ஆவணங்களை பெற்று தயார்நிலையில் வைத்திருக்க அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. சார்ந்த மாணவ/மாணவியரின் ஆதார் அடையாள அட்டை நகல்.
2. பெற்றோரின் கைப்பேசி எண்.
3. Nominee Details (தாய்/தந்தையின் பெயர் மற்றும் பிறந்த தேதி)

மேலும் தங்கள் பள்ளியின் Nodal Officer தபால் துறை ஊழியர்கள் தங்கள் பள்ளியை அணுகும் போது அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்து அஞ்சல் துறை ஊழியர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி தங்கள் பள்ளியில் பயிலும் எந்தவொரு மாணவர்களும் விடுபடாமல் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் ஆதார் எண்ணுடன் இணைந்த வங்கிக் கணக்கு அஞ்சல் துறை மூலம் பெற்று வழங்க போதிய ஒத்துழைப்பு அளிக்க அறிவுறுத்துமாறு அனைத்து அரசு/அரசு நிதி உதவி பெறும் மற்றும் தனியார் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நாட்களில் மட்டும் (OTP எண்ணை பெறுவதற்காக) பெற்றோரின் கைப்பேசியினை மாணவ/மாணவியர்கள் கொண்டு வர அல்லது பெற்றோர் பள்ளிக்கு வர அனுமதிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கலாகிறது.

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google sheet –ல் தங்கள் பள்ளியில் ஆதார எண்ணுடன் இணைந்த அஞ்சல் வங்கிக் கணக்கு எண் துவங்கப்பட்டு பணி முடிக்கப்பட்ட விவரத்தை தங்களுக்கு குறிப்பிட்டுள்ள தேதி அன்று பூர்த்தி செய்து உடன் அனுப்பி வைக்க Nodal Officer –ஐ அறிவுறுத்துமாறு அனைத்து பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு-

1. பள்ளிகளின் பெயர் பட்டியல்.
2. Google sheet

ஒம்/-

முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை

பெறுநர்

1.மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை)வடக்கு மற்றும் தெற்கு.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்(தனியார் பள்ளிகள் )வடக்கு மற்றும் தெற்கு.
3.கல்வி அலுவலர் (சென்னை மாநகராட்சி)சென்னை மாவட்டம்.
4. அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்.